# இணைய வணிகத்திற்கு தயாராகும் மளிகை கடைகள்! - இணைய வணிகம்

***சென்னை: கரோனா பாதிப்பு காரணமாக ஏராளமான மக்கள் இணைய வணிகத்தை விரும்பும் சூழலில் சூப்பர் மார்க்கெட்கள், மளிகை கடைகள், மருந்து விற்பனை கடைகள் பல இணைய விற்பனைக்கு தயாராகி வருகின்றன.***



*shop*

By
Published : October 19, 2020 at 1:06 PM IST

கரோனா பாதிப்பு காரணமாக அன்றாட வாழ்க்கையில் தொழில்நுட்பத்தின் மீதான சார்பு அதிகரித்துள்ளது. இந்த நேரத்தில், சிறு தொழில்கள் மின்னணுமயமாவதற்கு மென்பொருள் சேவை வழங்கிவரும் கோ ஃப்ரூகல் (Go Frugal) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலரான குமார் வேம்பு உடன் ஈடிவி பாரத் நேர்காணல் கண்டது.

அவர் தெரிவித்த கருத்துகள் பின்வருமாறு:

"ஊரடங்கு தொடங்கப்பட்ட காலத்தில் அதிக நிறுவனங்கள், கடைகள் டிஜிட்டல் மயமாயின. தொடக்கத்தில் இது சற்று சிரமமாக இருந்ததால், புதிய மென்பொருள் தயாரிப்பில் ஈடுபட முடியவில்லை. பின்னர் வீட்டிலிருந்து வேலை பார்க்கும் நடைமுறைக்கு மாறிவிட்டோம். சூப்பர் மார்கெட்கள், மளிகை கடைகள், மருந்து கடைகள் அதிகளவில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களுக்கு மாறி வருகின்றன.

கரோனா பாதிப்புக்கு பிறகு உணவு வணிகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, உணவகத்தில் அமர்ந்து சாப்பிடுவது குறைந்துள்ளது. அதேபோல், முடித்திருத்தம் செய்யும் கடைகள், ஸ்பாக்கள், நகைக்கடை, அழகு சாதனப்பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள், துணிக்கடைகள் பாதிப்பை சந்தித்து வருகின்றன.

அத்தியாவசிய பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள், கடைகள் முழுவீச்சில் இயங்கி வருகின்றன. அதிகளவிலான சூப்பர் மார்கெட்களும், மளிகை கடைகளும் சரக்குகளின் இருப்பு குறித்த தகவலை முழுக்க முழுக்க டிஜிட்டல் மயமாக்கி வருகின்றன. இதன் மூலம், நிறுவனங்கள் தங்கள் வணிகத்தை நெறிப்படுத்துவதுடன் இணைய வணிகத்தில் நுழைய முடியும்.




*இணைய வணிகத்திற்கு தயாராகும் மளிகை கடைகள்!*

தற்போது கரோனா அச்சம் காரணமாக மக்கள் இணையம் வாயிலாக பொருட்களை வாங்கவே

பாஜக, பாமக, தவெக உள்ளிட்ட கட்சிகள் பேசத் தொடங்கி இருப்பது போல் தமிழ்நாட்டில் அடுத்தது கூட்டணி ஆட்சி தான்...

- வாய்ப்பு உள்ளது
- வாய்ப்பு இல்லை
- கருத்து இல்லை

Vote

## லேட்டஸ்ட் நியூஸ்

July 22, 2025 at 3:20 PM IST - State
மகளை கொன்று விட்டு தற்கொலைக்கு முயன்ற தந்தை... சென்னையில் கொடூர சம்பவம்!

July 22, 2025 at 3:10 PM IST - State
"நீதித் துறையின் சுதந்திரத்தை பாதுகாப்பேன்" - தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா!

July 22, 2025 at 3:06 PM IST - State

விரும்புகின்றனர். இதனால் அண்மையில் சுமார் 2,500 நிறுவனங்கள் டிஜிட்டல் தளத்துக்கு மாறியுள்ளன. வாடிக்கையாளர்களின் வெவ்வேறான தேவைகளுக்கு ஏற்ப மென்பொருள் சேவை வழங்குகிறோம். வாடிக்கையாளர்கள், உணவகத்துக்கு நேரடியாக சென்று தங்களது செல்போனிலேயே உணவுகளின் பட்டியலை அறிந்து, ஆன்லைனில் ஆர்டர் செய்யும் வகையில் செயலி ஒன்றை வடிவமைத்துள்ளோம். இதற்கு வரவேற்பு அதிகரித்துள்ளது. அதேபோல் வாட்ஸ்அப் மூலம் ஆர்டர்களை பெறுவதற்கான மென்பொருளையும் உருவாக்கியுள்ளோம்.

இன்றைய உலகில் ஒரு வணிகத்தை இணைய வழிக்கு எடுத்துச் சென்று, பல்முனையங்களில் வாடிக்கையாளர்கள் சேவையை வழங்குவது முக்கியமானது. உதாரணமாக இணைய விற்பனையை ஊக்குவிக்கும் அதே நேரத்தில், சிலருக்கு கடையில் நேரில் வந்து பொருட்களை தேர்வு செய்து அதனை டோர் டெலிவரி செய்ய விரும்பினால், அதற்கான தீர்வுகளும் வழங்க வேண்டும். இதுபோல வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப சேவையாற்ற நிறுவனங்களுக்கு உதவி வருகிறோம். அமேசான், ரிலையன்ஸ் போன்ற பெரு நிறுவனங்கள் சிறு வணிகத்துக்கு வருவதால் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக சேவை கிடைப்பதோடு, வணிகர்களுக்கும் பலன் கிடைக்கும் " என்று கூறினார்.

இதையும் படிங்க: **மைக்ரோமேக்ஸ் நிறுவனத்தின் புதிய அடையாளமாக களம் காணும் ‘இன்’**

For All Latest Updates

Follow Us

TAGGED: Tamilnadu News | Grocery Shops | Online Shopping | தமிழ்நாடு செய்திகள் | இணைய வணிகம்

ABOUT THE AUTHOR

Follow +

## தொடர்புடைய கட்டுரைகள்



ராக்கெட்டை விட வேகமாக உயரும் தங்கம் விலை... இன்று சவரனுக்கு ரூ.840 அதிகரிப்பு!
July 22, 2025 at 10:41 AM IST



வாரத்தின் முதல் நாளேவா? - தொடர்ந்து உயரும் தங்கத்தின் விலை
July 21, 2025 at 2:00 PM IST



ஜெட் இல்ல.. ராக்கெட் வேகத்தில் உயர்ந்த தங்கம் விலை.. இனி அந்த பக்கமே போக முடியாதோ?
July 19, 2025 at 10:19 AM IST



தொடர்ந்து அதிகரிக்கும் தங்கம் விலை; இன்று ஒரு சவரன் எவ்வளவு தெரியுமா?
July 18, 2025 at 1:00 PM IST

**சீமான் பாஸ்போர்ட் காணாமல் போன விவகாரம் - நீதிமன்றம் போட்ட 'அதிரடி' உத்தரவு!**

July 22, 2025 at 2:38 PM IST - State

**வெளுத்து வாங்கப்போகும் கனமழை.. உங்க ஊரும் லிஸ்ட்ல இருக்கா?**

July 22, 2025 at 2:20 PM IST - State

**'7.5 லட்சம் போதாது'.. அஜித்குமார் குடும்பத்துக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு அளிக்க தமிழக அரசுக்கு உத்தரவு**

## சிறப்பு கட்டுரைகள்



தமிழ்நாடு
32 சிங்கப் பெண்களுக்கு கபடி பயிற்சி தரும் நெல்லை 'பிகில்'! தேசிய அளவில் கலக்கும் 'பாரதி' அணி!
July 16, 2025 at 5:16 PM IST



சாம்பியன்
EXCLUSIVE: சர்வதேச டென்னிஸ் அரங்கில் கலக்கும் கோவை சிறுமி; யார் இந்த இளம் வீராங்கனை மாயா?
July 13, 2025 at 4:29 PM IST



தமிழ்நாடு
வீடா?... இல்ல இது காடா? வேதனையின் விளிம்பில் பழங்குடியின மக்கள்!
July 15, 2025 at 8:24 PM IST



தமிழ்நாடு
மதுரையை அதிர வைத்த "மாநகராட்சி மலைமுழுங்கிகள்"; மண்டல தலைவர்களின் ராஜிநாமா பின்னணி என்ன?
July 16, 2025 at 5:52 PM IST

## Quick Links / Policies

CONTACT US
PRIVACY POLICY
ABOUT US
CODE OF ETHICS
AUTHORS
TERMS & CONDITIONS

## சிறப்பு கட்டுரைகள்

32 சிங்கப் பெண்களுக்கு கபடி பயிற்சி தரும் நெல்லை 'பிகில்'! தேசிய அளவில் கலக்கும் 'பாரதி' அணி!

EXCLUSIVE: சர்வதேச டென்னிஸ் அரங்கில் கலக்கும் கோவை சிறுமி; யார் இந்த இளம் வீராங்கனை மாயா?

வீடா?... இல்ல இது காடா? வேதனையின் விளிம்பில் பழங்குடியின மக்கள்!

மதுரையை அதிர வைத்த "மாநகராட்சி மலைமுழுங்கிகள்"; மண்டல தலைவர்களின் ராஜிநாமா பின்னணி என்ன?

Copyright © 2025 Ushodaya Enterprises Pvt. Ltd., All Rights Reserved.